1977 ஆகஸ்ட் 9]

திரு. என். சுந்தரராஜ்: பிரச்னைகளைப் பல கோணங்களிலே நோக்க வேண்டுமே தவிர, ஒருவர் சொன்னால் போதும் என்றால், அந்தக் கட்சியின் சார்பிலே சொன்னதாகத்தானிருக்கும். ஆகவே, மாறாகச் சொல்ல அனுமதிக்க வாய்ப்பளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: இது முடிந்த வரையிலும் சரி. இனி, ஒத்தி வைப்புத் தீர்மானத்தில் பேச வாய்ப்பு கொடுக்கும்போது...... ஒரு கட்சிக்கு ஒருவர் என்றுதான் வைத்திருக்கிறோம். அந்த முறையைப் பின்பற்ற வேண்டும். கட்சிக்கு ஒருவரை அனுமதிக்க வேண்டும்.

திரு. என். சுங்கரய்யா: நானும் அதே கருத்தை வற்புறுத்துகிறேன். ஒத்தி வைப்புத் தீர்மானம் என்று வரும்போது கட்சிக்கு ஒருவர் என்ற முறை இருப்பது அவசியம்.

திரு. மு. கருணாநிதி: ஏற்கனவே, இந்த அவையில் 10, 15 பேர்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தாலும், கட்சிக்கு ஒருவர்....அவர்கள் யாரைப் பேசவதற்குத் தேர்ந்தெடுக்கிறார்களோ அவர்கள் கட்சியின் சார்பில் பேசுவதற்கு அனுமதிப்பதுதான் இந்த அவையின் மரபாக இருக்கிறது. அந்த வகையிலே பேசுவதுதான் நலம்.

திரு. என். சுந்தரராஜ்: தலைவரவர்களே, முதலாவது தீர்மானம் கொடுத்தவர் பேச அனுமதிக்கப்படுவார் என்று தாங்கள் சொன்னதை மாற்றிக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் தலைவர் கட்சிக்கு ஒருவருக்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டதை ஏற்றுக்கொண்டேன். அப்படியே இனி நடைபெறும்.

6. அறிக்கை அளித்தல்.

மூன்றாவது சம்பளக்குழு உறுப்பினர்கள் நியமனம், பணிகள் குறித்து நிதி அமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, சட்டமன்றப் பேரவை விதி 82-ன்கீழ் மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் ஓர் அறிக்கையை அவைக்கு அளிப்பார்கள்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு உயர்நீதி மன்றத்தின் முன்னாள் நீதிபதி திரு. ஆர். சதாசிவம் அவர்களின் தலைமையில் மூன்றுவது சம்பளக் குழு நியமிக்க அரசு முடிவு செய்திருப்பதை நான் அவைக்கு அறிவித்ததை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். வருவாய்த்துறை வாரியத்தின் முன்னாள் முதல் உறுப்பினர் திரு. எம். ஜி. ராஜாராம் அவர்களையும் தற்போது அரசின் இணைச்செயலாளராகப் பணியாற்றும் திரு. எஸ். சீனிவாசன், ஐ.ஏ.எஸ். அவர்களையும் அக்குழுவின் ஏனைய இரு உறுப்பினர்களாக நியமிப்பதென இப்பொழுது முடிவு செய்துள்ளோம். திரு. எஸ். சீனிவாசன் குழுவின் உறுப்பினர்—செயலாளராகப் பணியாற்றுவார்.

2. இக்குழு கவனிக்க வேண்டிய அம்சங்கள் வருமாறு :—

(i) நம் மாநில அரசு விதி இயற்றும் அதிகாரத்தின் கீழ் பணியாற்றும் எல்லா வகையான அலுவலர்களின் தற்போதைய வெவ்வேறு சம்பள வீதங்கள், அகவிலைப்படி, ஏனைய ஈட்டுப் படிகள், சலுகைகள், ஓய்வுகால நன்மைகள் ஆகியவற்றை ஆராய்ந்து, சம்பள வீதங்களைச் சீரமைக்கவும் எளிதாக்கவும் அவசியமான, நடைமுறையில் செயல்படுத்தத்தக்க மாற்றங்களைப் பரிந்துரை செய்யும். நிகரான பழைய சம்பள வீதங்களிலுள்ள அலுவலர்களைப் புதிய சம்பள வீதங்களில் பொருத்துவதற்கு ஏற்புடைய முறையையும் பரிந்துரை செய்யும்.

(ii) சம்பள வீதங்களை முன்னர் மாற்றியமைத்ததால் முரண்பாடுகள் எவையேனும் ஏற்பட்டிருப்பின் அவற்றை ஆராய்ந்து, அந்த முரண்பாடுகளைப் போக்குவதற்குப் பொருத்தமான பரிந்துரைகளைச் செய்யும்.

(iii) தனது பரிந்துரைகளினால் உள்ளாட்சி மன்றப் பணியாளர்கள், மானியம் பெறும் பள்ளிகளின் ஆசிரியர்கள், மானியம் பெறும் கல்விக் கூடங்களிலுள்ள பிற பணியாளர்கள் ஆகியவர்களின் ஊதியங்களில் ஏற்படும் விளைவுகளை இக்குழு பரிசீலிக்கும். பல்கலைக் கழக மானியக் குழு பரிந்துரை செய்த சம்பள வீதங்களினால் பயனடையும் பல்கலைக் கழக ஆசிரியர்கள், அரசுக் கல்லூரிகளிலும், தனியார் கல்லூரிகளிலும் பணியாற்றும் ஆசிரியர்கள் ஆகியவர்கள் இக்குழுவின் பரிசீலனைக்கு உட்பட மாட்டார்கள்.

(iv) தமிழ்நாடு இரண்டாவது சம்பளக் குழு பரிந்துரைகளைச் செயல்படுத்திய பின்னர், கூடுதல் அகவிலைப்படி, இடைக்கால நிவாரணம் ஆகிய வகைகளில் அரசு அளித்துள்ள ஊதிய உயர்வுகளையும் ஏனைய சலுகைகளையும் குழு கருத்தில் கொள்ளும்:

(v) அரசு அலுவலர்களுக்குக் கிடைக்கிற சுகாதார வசதிகள், குழந்தைகளுக்குக் கல்வி வாய்ப்புகள் வீட்டுவசதி, சிக்கனத்தை ஊக்குவிப்பதையும், சமூகப் பாதுகாப்பையும் முன்னிட்ட திட்டங்கள் குறித்துத் தக்க பரிந்துரைகளைக் குழு செய்யும்.

(vi) குழு தனது பரிந்துரைகளைச் செய்கையில், நம் மாநிலத்திலும் நாட்டிலுமுள்ள வரலாற்றுப் பின்னணி, பொருளாதார நிலைமை பரிந்துரைகளால் ஏற்படக்கூடிய நிதிச்செலவு, பொதுவாகத் திட்டத்திற்காகவும், திட்டத்தின் கீழ்வராத ஏனைய இன்றியமையாச் செலவுகள், குறிப்பாக, ஐந்தாதாவது, ஆருவது திட்டங்களை நிறைவேற்றுவதற்காக இம் மாநிலத்திற்கு வேண்டியிருக்கும் நிதிவசதி ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளும்.

(vii) இக்குழு தனது பணியைச் செய்யுங்கால் மாநில அரசு கேட்டுக்கொள்ளக்கூடிய பிறவற்றைக் குறித்தும் பரிந்துரை செய்யும்.

3. முறையீடுகளைச் செய்துகொள்ள, பொதுமக்கள், உள்ளாட்சி மன்றப் பணியாளர்கள், மானியம் பெறும் பள்ளிகளின் ஆசிரியர்கள் உட்பட அரசு அலுவலகங்களின் அங்கீரிக்கப்பபட்ட சங்கங்கள் ஆகியவர்களுக்கு இக்குழு முழுவாய்ப்பளிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிருேம். இயன்ற விரைவில் இக்குழு தனது அலுவல்களை மேற்கொண்டு, அறிக்கையை அளிக்குமாறு வேண்டப்படுகிறது. இவ்வகையில் அரசு ஆணைகள் தனியே பிறப்பிக்கப்படுகின்றன. அவையினர் தகவலுக்காக நான் இந்த அறிக்கையை அவை முன் வைக்கிறேன்.

திரு. ஆர். உமாநாத்: பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: There shall be no debate.

திரு. ஆர். உமாநாத்: சப்ஜெக்ட்டிலே பாயின்ட் ஆப் ஆர்டர் 'ரெய்ஸ்' பண்ணலாம். என்னுடைய பாயின்ட் ஆப் ஆர்டர் இது சம்பந்தப்பட்டது அல்ல. இந்த கமிட்டி கான்ஸ்டிடியூட் செய்வது சம்பந்தமாக ஒரு கேள்வி வந்த போது ஊழியர்கள் பிரதிநிதிகள் இடம்பெறுவார்களா என்று கேட்டதற்கு நிச்சயமாகப் பரிசீலனை செய்யப்படும் என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: நிச்சயமாகப் பரிசீலித்ததற்குப் பிறகு தேவையில்லை என்ற முடிவுக்கு சர்க்கார் வந்திருப்பதற்கான காரணத்தை நான் கடைசியில் படித்தேன். 'முறையீடுகளைச் செய்து கொள்ள, பொதுமக்கள், உள்ளாட்சி மன்றப் பணியாளர்கள், மானியம் பெறும் பள்ளிகளின்

ஆசிரியர்கள் உட்பட அரசு அலுவலகங்களின் அங்கீகரிக்கப் பட்ட சங்கங்கள் ஆகியவர்களுக்கு இக்குழு முழு வாய்ப் பளிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றோம்.'' ஆன யினால் அவர்கள் இருந்து தீர வேண்டுமென்ற அவசியம் இல்லை. இல்லாமலேயே தங்களுடைய கருத்தைத் தாராளமாகச் சொல்லலாம்.

(திரு. ஜேம்ஸ் எழுந்தார்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதன் மேல் டிபேட் இல்லை.

5. தகவல் கோரல் (தொடர்ச்சி).

(ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தை மீண்டும் கேரளத் தோடு இணைப்பது குறித்து கேரள சட்ட மன்றத்தில் எழுப்ப பட்ட பிரச்சினை குறித்து.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, ஒரு முக்கிய மான விஷயம். நேற்றையதினம் கேரள சட்டசபையில் கன்னியாகுமரி மாவட்டத்தை மீண்டும் கேரளத்தோடு இணைப் பதற்காக பிரச்னை எழுப்பப்பட்டிருக்கிறது .இதற்கு முன்ன தாக 2, 3 மாதங்களுக்கு முன்பாகவும், நெருக்கடி நிலைமை இருந்த போதும் கூட சட்ட மன்றத்தில் இந்தப் பிரச்னை எழுப் பப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நம்முடைய அவையின் மரபுப்படி எழுத்து மூலம் தந்திருக்கிறீர்களா? அதைக கொண்டு வரவில்லை என்பதற்காக எழுப்புகிறீர்களா என்பது தெரியவில்லை. எதன் அடிப்படையில் இதைச் சொல்கிறீர்கள் என்று தெரியவில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, நீங்கள் முன்பு இந்த அவையின் அங்கத்தினராக இருந்த போதுகூட இந்தப் பிரச்னை எழுப்பப்பட்டது, அப்போது கூட எந்த விதிமுறைக்கும் உட்பட வில்லை. ஆகவே இது விதிமுறைக்கு மாறுபட்டு இருந்தாலும் கூட அனுசரித்து ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : யாரிடம் விளக்கம் கேட்கிறீர்கள்? அந்த சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் இந்த விளக்கம் இருக்கிறதா, தகவல் இருக்கிறதா என்று தெரிந்து கொள்ளாமல், திடீரென்று சிக்கலான ஒரு பிரச்னையை எழுப் பினால் அதற்குப் பதிலளிக்க அவர்கள் தயாராக இருக்கிறார் களா?